மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 302/2017</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 17ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயலட்சுமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>17.02.2026 பி.வா.சா.3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எனது மகன் என்றால் ஆமாம். நான் இந்த வழக்கில் தனிப்பட்ட முறையில் எதிர்வாதம் தாக்கல் செய்யவில்லை என்றால் பொதுவாக தான் தாக்கல் செய்துள்ளோம். 5ம் பிரதிவாதி குமாரசாமி கவுண்டர் தாக்கல் செய்த எதிர்வாதத்தை எங்கள் எதிர்வாதமாகவும் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் முதலாவது சாட்சியாக என்னை விசாரித்துக் கொள்ளாததற்கு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி எங்கள் தரப்பு 1வது சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். மூன்றாம் நபரான சண்முகசுந்தரம் என்பவர் எங்கள் தரப்பில் 2வது சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். சண்முகசுந்தரம் தன்னுடைய முதல் விசாரணை நிரூபண

வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை நான் அப்படியே எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலமாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. அது எனக்கு தெரியவில்லை. எனது தரப்பில் புதிதாக ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது.

2. எனது தரப்பில் ஏற்கனவே பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நபர்கள் என்ன வாக்குமூலம் கொடுத்தார்கள் என்பதை நான் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம் பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 ஆகியோர்கள் இந்த நீதிமன்றத்தில் கொடுத்துள்ள சாட்சியத்தை பொறுத்து எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சண்முகசுந்தரம் கொடுத்த சாட்சியத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. இந்த வழக்கில் எங்கள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள பி.வா.சா.1 மற்றும் பி.வா.சா.2 ஆகியோர்கள் சாட்சியத்தில் உள்ள குறைபாடுகளை களைவதற்காக தான் மூன்றாம் நபரான சண்முகசுந்தரம் என்பவரை எங்கள் தரப்பில் சாட்சியாக விசாரித்ததற்கு பின்னிட்டு நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.17 18:49:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்